செ. வெ. எண். 1029 நாள். 23.11.2010

# மழை, வெள்ள நிவாரணப் பணிகளை மேற்கொள்ள கலைஞர் வேண்டுகோள்!

கடுமழை, வெள்ளம் ஆகியவற்றால் தமிழகத்தில் பாதிக்கப்பட்டுள்ள ப்குதிகளில் அரசின் சார்பில் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், அரசு அதிகாரிகளும் நிவாரணப் பணி களிலே தொடர்ந்து ஈடுபடுகிறார்கள் என்றாலும், அமைச்சர் களும், பல்வேறு பொறுப்புக்களிலே உள்ள கழகத்தினரும், உள்ளாட்சித் துறை அலுவலர்களும், கழகச் செயலாளர்களும் உடனடியாக அரசு அலுவலர்களுக்கு ஒத்துழைத்து, நிவாரணப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்றும், சேத விவரங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மூலமாக அரசுக்கு உடனடியாகத் தெரிவிக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இவ்வாறு முதலமைச்சர் கலைஞர் தனது அறிக்கையிலே கேட்டுக் கொண்டுள்ளார்.

//

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை
சென்னை - 9